**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம். சி.ஓ.பி.எண். 194/2007** **நாள். 05.01.2023**

2023ம் ஆண்டு ஜனவரி திங்கள் 05ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சுப்பிரமணி | சாதி | |
| கிராமம் | மேல்மலையனூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 35 |

**ம..சா.1**

**குறுக்கு விசாரணை**

I. விபத்து நடந்த சாலை சேத்பட்யிலிருந்து செஞ்சி செல்லும் சாலை என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் மாலை 6.30 மணி இருட்டான நேரம் என்றால் சரியல்ல. TN 32 D 7777 என்ற பழுதடைந்த காரை TSB 6521 என்ற கார் மூலம் எடுத்து வந்தேன். அவ்வாறு எடுத்து வரும் போது TSB6521 என்ற கார் பஞ்சர் ஆனதால் இரண்டு காரும் நின்று விட்டது. மேற்படி இரண்டு காரும் நடுரோட்டில் நின்றுவிட்டது என்றால் சரியல்ல. அரசு பேருந்து சேத்பட்யிலிருந்து செஞ்சி நோக்கி வந்தது. கார் ரோட்டில் நிறுத்தி வைத்திருந்தது சம்பந்தமாக எந்தவித சிக்னலும், இல்லாததால் அரசு பேரூந்து கார்கள் மீது மோதிவிட்டது என்றால் சரியல்ல. நான் கார் மெக்கானிக் ஆவேன். நான் கவனகுறைவாக இருந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.

II. நான் விபத்து சமயத்தில் அரசி ஆலையில் வேலை செய்து மாதம் ரூ. 7500/- சம்பாதித்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொர்ப்ப காயம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம் பத்தி 10 ல் அதிக நஷ்டயீடு பெறுவதற்காக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டயீடு அதிகம் என்றால் சரியல்ல..